**வெலிவிட்டி திவிதுர பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

எத்கந்துர புரநெகும கட்டிடம் அமைந்துள்ள வளவில் கொங்கிரீட் வடிகால் நிர்மாணித்தல் மற்றும் அம்பேகம சனசமூக நிலையத்திற்கு நீர் தொட்டி ஒன்று மற்றும் மோட்டர் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 227,404 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள அவதானிக்கப்பட்டன.

(i) 2007 ஆண்டு முதல் 2016 ஆண்டுவரை பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 11,153,611 தொகையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 300,589 தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுகளின் போது பூர்த்தி செய்திருந்த 03 நிர்மாண வேலைகள் தொடர்பில் செலுத்த வேண்டிய ரூபா 444,108 தொகையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டண அட்டவணைகள் தயாரிப்பதற்கான கொடுப்பனவு ரூபா 66,100 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| விதி 131 | 2,522,602 | 2017 ஆண்டின் போது சபைக்கு சொந்தமான பொது வங்கி கணக்கு ஒன்றின் மாதாந்த சராசரி மீதி ரூபா 2,522,602 தொகை எனினும் அதனை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,582,178 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,778,929 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமானம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 320,000 | 18,835 | 35,940 | 87,490 | 289,000 | 21,073 | 71,276 | 104,596 |
| (ii) வாடகை | 1,175,200 | 43,200 | 43,200 | - | 1,416,700 | 43,200 | 55,800 | 600 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 187,500 | 493,050 | 480,950 | 15,350 | 216,000 | 433,850 | 432,100 | 3,250 |
| மொத்தம் | 1,682,700 | 555,085 | 560,090 | 102,840 | 1,921,700 | 498,123 | 559,176 | 108,446 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

சிட்டையிடப்பட்ட ஏக்கர் வரி வருமானம் ரூபா 18,835 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அறவீடுகள் ரூபா 35,940 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான தொகையில் அறவீடுகள் 29 சதவீதமாகிய மிகவும் குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது.

### 2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 17,443,280 மற்றும் நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 138,417 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேசசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

ஆக்கப்பட்டிருந்த துணைவிதிகளின் பிரகாரம் சபையினால் நிறை வேற்றப்படவேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும் அது தெளிவாக மற்றும் முறைமையுடன் தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) நிறைவேற்றப்படாத செய்பணிகள்**

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் சேதமடைந்திருந்து வெலிவிடிய திவிதுல பிரதேசசபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2017 ஆண்டின் போது பாதைகளின் திருத்த வேலைகளுக்காக ரூபா 100,000 தொகை மற்றும் பாதை அபிவிருத்தி மற்றும் வீதி விளக்குகளை திருத்துவதற்காக ரூபா 75,000 தொகையும் கிடைத்திருந்த போதிலும், 2018 ஜுன் வரை அவ்விடயங்கள் ஆரம்பக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திண்மக் கழிவுப் பொருள் போடுவதற்காக திவிதுர தோட்டத் தொகுதியில் 20 பர்சஸ் காணி பயன்படுத்தப்பட்டிருந்தது. வாரத்திற்கு ஒருமுறை உக்கக் கூடிய குப்பைகள் சுமார் 0.25 தொன்கள் அந்தக் காணிக்கு போடப்பட்டிருந்ததுடன், கிடங்குகள் வெட்டி, மூடும் திட்டமொன்று காணப்பட்ட போதிலும், அவ்வாறு செய்திருக்காமையினால் குப்பைகள் காணி முழுவதும் பரந்து காணப்பட்டது.

(ii) குப்பை போடப்படும் காணிக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்காததுடன், 2017 ஆண்டின் போது குப்பை போடுவது வீடுகள் மட்டத்தில் மேற்கொள்வதற்காக ரூபா 47,782 தொகை செலவிடப்பட்டு, 13 குப்பை பாத்திர தொகுதிகள் கொள்வனவு செய்து, விநியோகிக்கப்படாமல் கலஞ்சியத்தில் காணப்பட்டது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

மின்சக்தி மற்றும் வலு அமைச்சின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய PE/01/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்காக சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்காமையினால் ரூபா 780,160 தொகை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் ஊழியர் கட்டமைப்பில் இரண்டாம் பிரிவில் 06 பதவிகள் மற்றும் ஆரம்பப் பிரிவில் 02 பதவிகளில் வெற்றிடங்கள் மற்றும் ஒரு பதவி மிகையாக காணப்பட்டது. அந்த வெற்றிட பதவிகளை நிரப்புவதற்காக மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நூலக உதவியாளர் ஒருவருக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவியின் வேலைகளை மேவகை செய்வதற்காக சாட்டப்பட்டிருந்ததுடன், வேலை வெளிக்கள தொழிளாலர் இருவருக்கு ஆயுர்வேத மருந்து கலவையாளர் மற்றும் முன்பள்ளி நிருவகிக்கும் கடமைகள் சாட்டப்பட்டிருந்தது.

**(ஆ) பதவியணிக் கடன்**

சபையின் வேலை வெளிக்கள தொழிளாலராக கடமையாற்றிய ஒருவர் சேவையை விட்டுச் சென்றுள்ள காரணத்தினால் பதவியணிக் கடன் ரூபா 150,206 தொகையினை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) புறநெகும பல்கரும நிலையத்தின் முன் பள்ளி ஒன்று ஆரம்பிப்பதற்காக 40 சிறுவர் கதிரைகள் கொள்வனவு செய்திருந்த போதிலும், முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டடிருக்காமையினால் அவற்றில் 32 கதிரைகள் சபையின் கலஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) சபையினால் 2015 ஆண்டின் போது ரூபா 430,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த DM 20 இனத்தை சேர்ந்த மின்பிறப்பாக்கி கொல்வனவு செய்த நாள் முதல் செயற்படாமல் காணப்பட்டது.

(iii) குளிர்சாதனப் பெட்டி ஒன்று 2012 ஆண்டு முதல் சபையின் கலஞ்சித்தில் செயற்படாமல் காணப்பட்டது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஆண்டு முதல் வெளியே எடுத்துச் செல்லப்பட்ட ஒப்படைக்க வேண்டிய காலத்தை மிகைத்துள்ள ரூபா 28,050 தொகை பெறுமதியான 117 நூலகப் புத்தகங்களின் பெறுமதியை அங்கத்தவர்களிடம் அல்லது பிணையாளிகளிடம் அறவீடு செய்திருக்ககவில்லை.

(ஆ) 2017 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நூலகப் புத்தக கணிப்பீட்டின் போது ரூபா 13,974 தொகை பெறுமதியான 80 புத்தகங்கள் கணிப்பீட்டிற்காக சமர்பித்திருக்கவில்லை.

**3.6 பெறுகை**

**3.6.1 ஒப்பந்த நிருவாகம்**

புற நெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 34,151,894 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பல கரும கட்டிடத்தில் மின் தூக்கி ஒன்று பொருத்துவதற்காக ரூபா 4,100,933 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த மின் தூக்கி ஊனமுற்றோருக்காக

நுழைவாயிலாக பயன்படுத்தும் குறிக்கோள் இருந்த போதிலும், ஊனமுற்றோர் பயன்படுத்தக் கூடிய வகையில் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 02 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 134,000 இற்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஒரு செலவு விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட செலவு எல்லைகளை மிகைத்து ரூபா 1,783,686 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதி 26 சதவீதமாகும்.

(இ) 04 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 9,942,065 தொகை காணப்பட்டதுடன், அப்பெறுமதி 36 சதவீதம் முதல் 58 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் பெற்றிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு மற்றும் பதிவேடு கள் பேணல் | (i) | நீண்டகாலமாக காணப்பட்ட மீதிகள் தீர்த்திருக்காமை. |
| (ஆ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்தல் கவனம் செலுத்தி இருக்காமை |
| | | (ii) | முத்திரைக் கட்டண வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | | விளைவற்ற வாகனங்களை அகற்றுதல் அல்லது திருத்துதல் மேற்கொள்ளாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | நடைமுறைச் சாத்தியத்திற்கு ஏற்ற விதமாக பாதீடு திருத்தியிருக்காமை |